**மனன வசனம்**

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது; தீமைசெய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது. 1பேதுரு 3:12.**

**ஆராய்ச்சிக்கு**

**1பேதுரு 3:8-12; கலா 2:20; 1பேதுரு 4:1,2; ரோமர் 6:1-11; 2சாமு 11:4; 1பேதுரு 4:3-11.**

ஏப்ரல் 22 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

# தேவனுக்காக வாழ்தல்

மனிதர்களின் பாவநிலையை வேதாகம எழுத்தாளர்கள் நன்றாக அறிந்திருந்தார்கள். அறியாமல் இருக்க முடியுமா? உலகம் முழுவதிலும் பாவ நாற்றம் வீசுகிறதே! அதுபோக, தங்களுடைய பாவநிலையை அறிந்தவர்களாகவும் இருந்தார்கள். 1தீமோ 1:15. அந்தப் பிரச்சனை எவ்வளவு மோசமானது என்பதையும் அறிந்திருந்தார்கள்; அதாவது பாவப்பிரச்சனையைப் போக்குவதற்கு இயேசு சிலுவைக்குச் செல்லவேண்டியிருந்தது. உண்மையிலேயே பாவம் அவ்வளவுக்கு ஆழமாக, எங்கும் நிரம்பியுள்ளது.

ஆனால், கிறிஸ்துவின் வல்லமை தங்களுடைய வாழ்க்கையை மாற்றமுடியும், அவருக்குள் தங்களைப் புதியவர்களாக உருவாக்கமுடியும் என்பதையும் வேதாகம எழுத்தாளர்கள் அதிகமாக உணர்ந்திருந்தார்கள்.

முன்பு தான் சொல்லிவந்த அதே பாணியில்தான் இந்த வாரமும் பேதுரு தொடர்கிறார். அதாவது, கிறிஸ்தவர்கள் தங்களை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து, ஞானஸ்நானம் பெற்றபிறகு, வாழுகிற புதிய வாழ்க்கையை வலியுறுத்துகிறார். மற்றவர்கள் கண்டுகொள்கிற அளவுக்கு அந்த மாற்றம் பெரியதாக இருக்கும். அந்த மாற்றம் எளிதாக நிகழக்கூடிய ஒன்றென பேதுரு சொல்லவே இல்லை; மாறாக, நமக்கு வாக்குரைக்கப்பட்டிருக்கும் வெற்றியை நாம் பெற்றுக்கொள்ள மாம்சத்தில் பாடுபடவேண்டியது அவசியமென்கிறார். 1பேதுரு 4:1.

வேதாகமம் முழுவதிலும் காணப்படும் ஒரு கருத்தை பேதுரு வலியுறுத்துகிறார்; அதாவது, இயேசுவை விசுவாசிக்கிற ஒருவருடைய வாழ்க்கையில் காணப்படும் அன்புதான் அது. 'அன்பு திரளான பாவங்களை மூடும்' என்கிறார். 1பேதுரு 4:8. நாம் அன்புகூரும்போது, நாம் மன்னிக்கும்போது, இயேசு நமக்காகச் செய்திருப்பதையும், நமக்காகச் செய்துவருவதையும் நாம் பிரதிபலிக்கிறோம்.

*2017, ஏப்ரல் 29 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## 'ஒருமனப்பட்டவர்களாக' இருத்தல்

***கிறிஸ்தவர்கள் வாழவேண்டிய விதம்பற்றி 1பேதுரு 3:8-12ல் பேதுரு வலியுறுத்தும் கருத்து என்ன? 1பேதுரு 2:20,21ல் தான் சொன்ன என்ன கருத்தை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறார்?***

எல்லாரும் 'ஒருமனப்பட்டவர்களாக' (ஹோமோஃப்ரோனஸ்) இருக்கவேண்டுமென பேதுரு ஆரம்பிக்கிறார். எல்லாரும் ஒன்றுபோல் யோசிக்கவேண்டும், ஒன்றுபோல் செயல்படவேண்டும், ஒன்றுபோல் நம்பிக்கைகொள்ள வேண்டும் என்கிற ரீதியில் அங்கு அவர் பேசவில்லை. 1கொரி 12:1-26ல் இந்தக் கருத்தை நாம் மிகத் தெளிவாக விளங்கிக்கொள்ள முடியும். அங்கு, சரீரமானது பல அங்கங்களாலானதாக பவுல் சுட்டிக்காட்டுகிறார். கைகள் இருக்கின்றன, கால்கள் இருக்கின்றன; அவை அனைத்தும் சேர்ந்து ஒரே சரீரத்தை உருவாக்குகின்றன. அதுபோல, வெவ்வேறு ஆவிக்குரிய வரங்களைப் பெற்றிருக்கும் தனிநபர்களால் ஆனதுதான் சபை. ஆனால், விசுவாசிகள் அனைவருமே ஒரே நோக்கமும் ஆவியும் உள்ளவர்களாக இணைந்து காணப்படவேண்டும். ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தை உருவாக்குவதற்கு அவர்கள் சேர்த்து உழைக்கவேண்டும்.

அத்தகைய ஒற்றுமையை உருவாக்குவது எளிதானதல்ல. இந்த மோசமான உண்மையை கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் நாம் காணமுடிகிறது. எனவே, விசுவாசிகள் ஒருவருக்கு ஒருவர் ஒத்துப்போகாத நிலையை பேதுரு இங்கு எச்சரிக்கிறார். பிறகு, ஒன்றிணைந்திருக்கும் இந்தக் கிறிஸ்தவ நற்பண்பை அவர்கள் எவ்வாறு வெளிப்படுத்தலாமென வாசகர்களுக்குக் காட்டுகிறார்.

உதாரணமாக, கிறிஸ்தவர்கள் மனஉருக்கமுள்ளவர்களாக நடக்கவேண்டும். 1பேதுரு 3:8. ஒரு கிறிஸ்தவர் பாடுபடும்போது, அவரோடு சேர்ந்து மற்றவர்களும் பாடுபடுவதும், ஒரு கிறிஸ்தவர் மகிழ்ச்சியடையும்போது அவரோடு சேர்ந்து மற்றவர்களும் மகிழ்ச்சியடைவதும்தான் மனதுருக்கம். 1கொரி 12:26. மனதுருக்கம்தான் ஒருவரை அவருடைய கண்ணோட்டத்தில் பார்க்க உதவுகிறது; ஒற்றுமையைக் கொண்டுவருவதில் அது முக்கியப் பங்காற்றுகிறது. ஒருவரை ஒருவர் நேசிக்கும்படி பேதுரு கூறுகிறார். 1பேதுரு 3:8. இயேசுவும்கூட, நாம் ஒருவரில் ஒருவர் அன்பாக இருப்பதுதான் அவருடைய மெய்யான சீடர்களுக்கான அடையாளம் என்று கூறியிருக்கிறார். யோவான் 13:35. மேலும், கிறிஸ்தவர்கள் இரக்கமனமுள்ளவர்களாக இருப்பார்களென பேதுரு கூறுகிறார். 1பேதுரு 3:8. மற்றவர்களின் கஷ்டங்களையும், தோல்விகளையும் கண்டு அவர்கள் மனதுருகுவார்கள்.

'சுயத்தைச் சிலுவையில் அறையுங்கள்; உங்களைவிட மற்றவர்களை மேன்மையாக எண்ணுங்கள். அப்போது கிறிஸ்துவுக்குள்ளான ஐக்கியத்திற்குள் கொண்டுவரப்படுவீர்கள். நீங்கள் தேவனுடைய குமாரரும் குமாரத்திகளுமாக இருப்பதை மேலோகத்திற்கு முன்பாகவும் உலகத்திற்கும் சபைக்கும் முன்பாகவும் சந்தேகமின்றி நிரூபிப்பீர்கள். உங்களுடைய முன்னுதாரண வாழ்க்கையால் தேவன் மகிமைப்படுவார்.' - *EGW, 9T, p 188.*

'தீமைக்குத் தீமையைச்' சரிகட்ட வேண்டாமென பேதுரு சொல்கிறார்; ஆனால், எத்தனை முறை நாம் அவ்வாறு நடந்துவிடுகிறோம்? 1பேதுரு 3:9 சொல்கிறபடி நடப்பதற்கு சுயத்திற்கு மரிக்கவேண்டியது ஏன் அவசியம்? எவ்வாறு சுயத்திற்கு மரிக்கலாம்? கலா 2:20.

ஆம், இயேசு நம் பாவங்களுக்காக மரித்தார்; அவருக்குள்ளும் அவருடைய நீதியிலும்மாத்திரமே நாம் இரட்சிப்பின் நம்பிக்கையைக் கண்டடையமுடியும். அவருடைய நீதியே நம்மை மூடுகிறது; தேவனுடைய கண்களில் நம்மை நீதிமான்களாகக் காட்டுகிறது. இயேசுவினால் நீங்கள் 'பாவமே செய்யாதவர்கள்போல தேவனுக்குமுன்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறீர்கள்.' - *EGW, SC, p 62.*

நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டதாகச் சொல்வதோடு அவருடைய கிருபை முடிந்துவிடவில்லை. நம்முடைய பாவங்களை மேற்கொள்வதற்கான வல்லமையையும் தேவன் தருகிறார்.

**1பேதுரு 3:18,21; 1பேதுரு 4:1,2; ரோமர் 6:1-11 ஆகிய வசனங்களை வாசியுங்கள். பாடுபடுவதற்கும் பாவத்திலிருந்து வெற்றிபெறுவதற்கும் இடையேயுள்ள தொடர்பு என்ன?**

இயேசுவின் தியாகபலி எப்படிப்பட்டது என்பதை மிகச்சரியாக விளக்கும் ஒரு கிரேக்க வார்த்தை 1பேதுரு 3:18ல் உள்ளது: **ஹபக்ஸ்** - 'முடிவாக' என்று இதற்கு அர்த்தம். இயேசுவின் பாடுகளும், அவர் நமக்காக மரித்ததும் நமக்கு முடிவாகப் பெற்றுத் தந்திருப்பதை வலியுறுத்த ஹபக்ஸை பேதுரு பயன்படுத்துகிறார்.

1பேதுரு 4:1ல் 'இப்படியிருக்க' என்று பேதுரு ஆரம்பிக்கிறார்; எனவே, 1பேதுரு 3:18-22ல் தான் சொல்லிவந்ததின் தொடர்ச்சியாக அவர் பேசுகிறார். நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படிக்கு கிறிஸ்து நம்முடைய பாவங்களின் நிமித்தம் பாடுபட்டார் என்றும் (1பேதுரு 3:18), 'ஞானஸ்நானமானது இப்பொழுது நம்மையும் இரட்சிக்கிறது' என்றும் முந்தைய வசனங்களில் பேதுரு சுட்டிக்காட்டுகிறார். 1பேதுரு 3:21.

எனவே, 'மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி பாவங்களை விட்டோய்ந்திருப்பான்' என்று சொல்லப்படுவதால், ஞானஸ்நானத்தின் பின்னணியில் பேதுரு சொல்வதை சிறப்பாக அறியமுடிகிறது. 1பேதுரு 4:2. ஞானஸ்நானத்தின்மூலம் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பாடுகளிலும் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்குகொள்கிறார்கள்; 'இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் (ஒவ்வொரு ஆணும் பெண்ணும்) மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைத்திருக்கத்' தீர்மானிக்கிறார்கள். 1பேதுரு 4:2. அனுதினமும் சுயத்தை ஆண்டவரிடம் அர்ப்பணிப்பதாலும், 'மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைவதாலும்' இது சாத்தியமாகிறது. கலா 5:24.

ஞானஸ்நானத்தின்போது கிறிஸ்தவர்கள் இயேசுவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்குகொள்கிறார்கள் என்று ரோமர் 6:1-11ல் பவுல் சொல்கிறார். ஞானஸ்நானத்தின்போது, பாவத்திற்கு நாம் மரிக்கிறோம். பாவத்திற்கு நாம் மரித்ததை நம்முடைய வாழ்க்கையில் இப்போது நிஜமாக்கவேண்டும். 'பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்' என்று பவுல் சொல்வதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் இரகசியமாக இருக்கிறது. ரோமர் 6:11.

பாவத்திற்கு எதிரான போராட்டத்தில் சமீபத்தில் எப்போது 'மாம்சத்தில் பாடுபட்டீர்கள்.' உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கைபற்றி உங்கள் பதில் சொல்வது என்ன?

## மறுபடியும் பிறத்தல்

கிறிஸ்துவுக்குள் நமக்கு ஒரு புதிய வாழ்க்கை, ஒரு புதிய ஆரம்பம் இருக்கிறது. நாம் மறுபடியும் பிறந்திருக்கிறோம். இதன் அர்த்தத்தைப் புரிந்தவர்கள், குறிப்பாக, சிறுபிராயத்தைக் கடந்தபின் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள், தாங்கள் முன்பு வாழ்ந்த வாழ்க்கையைக் காட்டிலும் வித்தியாசமானவர்களாக வாழ்வார்கள். உலகத்தார்போல வாழ்ந்து, பிறகு இயேசுவாலும் இரட்சிக்கும் அவருடைய கிருபையாலும் முற்றிலும் மாற்றமடைந்த பலரைப்பற்றி ஆச்சரியமான சம்பவங்களை நாம் கேட்டிருப்போம்.

சுயத்திற்கு மரிப்பதையும், ஞானஸ்நானத்தில் இயேசுவின் மரணத்திலும் உயிர்த்தெழுதலிலும் பங்குபெறுவதால் கிடைக்கிற புதிய வாழ்க்கையையும் பற்றிப் பேசிவிட்டு, அது எப்படிப்பட்ட மாற்றங்களைக் கொண்டுவருமென பேதுரு கூறுகிறார்.

***ஒருவருடைய வாழ்க்கையில் என்ன மாற்றங்கள் உண்டாகும்? 1பேதுரு 4:3-6. அந்த மாற்றங்கள் மற்றவர்களை என்ன சொல்லவைக்கும்?***

மதுமயக்கம், களியாட்டம், மதுவெறி போன்று மதுபான அடிமைத்தனத்தோடு சம்பந்தப்பட்ட வார்த்தைகளை பேதுரு கூறுகிறார். இதில் எந்த ஒரு குற்றமும் கிறிஸ்தவர்களில் காணப்படக்கூடாது. அதுபோன்ற ஊதாரித்தனங்களில் அந்தக் கிறிஸ்தவர் இனியும் ஈடுபடாததைக் கண்டு, அவருடைய முந்தைய வாழ்க்கையை அறிந்திருக்கிறவர்கள் 'ஆச்சரியப்படும்' அளவிற்கு மாற்றம் இருக்க வேண்டுமென பேதுரு கூறுகிறார். 1பேதுரு 4:4. எனவே, பிரசங்கம் செய்யாமலேயே அவிசுவாசிகளுக்குப் போதகம்பண்ணுகிற ஒரு வாய்ப்பை இங்குக் காண்கிறோம். உலகத்தின் எல்லா பிரசங்கங்களையும்விட, பக்கியுள்ள ஒரு கிறிஸ்தவ வாழ்க்கைதான் மிகப்பெரிய சாட்சியாக இருக்கிறது.

***நியாயத்தீர்ப்புபற்றி இந்த வசனங்களில் பேதுரு என்ன சொல்கிறார்?***

'மாம்சத்தில்' செய்த கிரியைகளுக்குத் தக்கபடி ஒரு நியாயத்தீர்ப்பு இருப்பதை வேதாகமத்தின் மற்ற இடங்களைபோலவே இங்கும் பேதுரு தெளிவுப்படுத்துகிறார். யோவான் 5:29; 2கொரி 5:10; எபி 9:27; 1பேதுரு 4:2. 'மரித்தோருக்கும்' சுவிசேஷம் அறிவிக்கப்பட்டதாக பேதுரு கூறுகிறார். 1பேதுரு 4:6. அதாவது, இப்போது மரித்திருந்தவர்களுக்கும்கூட முன்பு அவர்கள் உயிரோடு இருந்தபோது, தேவனுடைய இரட்சிக்கும் கிருபையை அவர்கள் அறிந்துகொள்வதற்கான ஒரு வாய்ப்பு வழங்கப்பட்டது. எனவே, தேவன் அவர்களை நியாயமாக நியாயந்தீர்ப்பார்.

தேவனை நீங்கள் விசுவாசியாமல் இருந்த காலத்தைவிட, இப்போது அவரில் நம்பிக்கையுள்ளவர்களாக எவ்வளவு வித்தியாசமான வாழ்க்கை வாழ்கிறீர்கள்? இயேசு உங்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட மாற்றத்தை உண்டுபண்ணியிருக்கிறார்?

முன்பு மக்கள் செய்துவந்த, ஆனால் இயேசுவை விசுவாசித்தபிறகு அவர்கள் விட்டுவிட்ட தவறான காரியங்களைப் பட்டியலிடும்போது, 'பாலுறவுப் பாவங்களையும்' பேதுரு குறிப்பிடுகிறார்.

***அந்தப் பட்டியலில் வேறு எவற்றையும் பேதுரு சொல்கிறார்? 1பேதுரு 4:3.***

---

அதிலுள்ள இரண்டு வார்த்தைகள் குறிப்பாக பாலுறவோடு சம்பந்தப்பட்டவை; 1. காமவிகாரம் (அஸெல்ஜியா - பாலின்பம் என்று அர்த்தம்); 2. துர்இச்சை (எபிதுமியா - 'அடங்காச் சிற்றின்பம்' என்று அர்த்தம்).

பாலுறவு குறித்து கிறிஸ்தவர்கள் தவறான கருத்துகொள்ளவும் அதிக வாய்ப்பிருக்கிறது. பாலுறவுக்கு எதிராக வேதாகமம் பேசவில்லை. மாறாக, பாலுறவைத் தந்தது தேவன்; மனித இனத்திற்கு மிகப்பெரிய ஆசீர்வாதமாக அதைத் தந்தார். ஆதியில், ஏதேனில் பாலுறவு இருந்தது. 'இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.' ஆதி 2:24,25. வாழ்க்கை முழுவதும் அர்ப்பணிப்போடு வாழவும், குழந்தைகளை வளர்ப்பதற்கு மிகச்சிறந்த ஒரு பின்னணியை அமைக்கவும் கணவனையும் மனைவியையும் ஒன்றிணைக்கிற மிகமுக்கிய விஷயங்களில் ஒன்றாக இது இருக்கவிருந்தது. தேவன் தம் மக்களோடு வைக்க விரும்புகிற நெருக்கத்தையும் ஐக்கியத்தையும் பிரதிபலிப்பதாகவும் அது விளங்கயிருந்தது. எரே 3: எசே 16; ஓசியா 1-3.

திருமணத்தில் இணைகிற ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பாலுறவானது மிகப்பெரிய ஓர் ஆசீர்வாதமாகும்; மற்றபடி, தவறாகக் கையாளும்போது உலகத்திலேயே மிகப்பெரிய அழிவுசக்திகளில் ஒன்றாக அது இருக்கிறது. இந்தப் பாவங்களின் மோசமான விளைவுகள் இப்போதைக்கு எவ்வளவு என்பதைக் கணக்கிடவே முடியாது. இந்த அற்புத ஈவைத் தவறாகப்பயன்படுத்துவதால் உண்டாகும் வாழ்க்கைச்சீரழிவுகளைக் காணாதவர்கள் நம்மில் யாராவது இருக்கமுடியுமா?

***2சாமு 11:4; 1கொரி 5:1; ஆதி 19:5; 1கொரி 10:8 ஆகிய வசனங்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு விஷயம் என்ன?***

இந்தப் பாவங்களால் உண்டாகும் பாடுகளையும் வேதனைகளையும் வேதாகமத்திலிருந்துதான் அறிந்துகொள்ளவேண்டுமென்கிற அவசியமில்லை.

ஆனாலும் நாம் கவனமாக இருக்கவேண்டும். இத்தகைய பாவங்கள் மக்களில் எதிர்மறையான தாக்கங்களை உண்டாக்கவல்லவை; அப்படிப்பட்டவர்களை சமுதாயம் முறைத்துப் பார்ப்பது வழக்கம். ஆனால் பாவம் பாவம்தான்; பாலியல் பாவத்திற்காகவும்தான் கிறிஸ்து மரித்தார். உணர்வுகள் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தில் கிறிஸ்தவர்கள் மிகக்கவனமாக இருக்கவேண்டும்; 'முதலில் உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போட்டுவிட்டு, பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பார்க்கவேண்டும்.' லூக்கா 6:42.

## அன்பு சகலத்தையும் மூடுகிறது

பேதுருவின் காலத்திலேயே, இயேசு சீக்கிரம் வரப்போகிறார் என்றும், இந்த உலகம் முடியப்போகிறது என்றும் கிறிஸ்தவர்கள் எதிர்பார்த்து வந்தார்கள். 'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள்' என்று பேதுரு சொல்வதிலிருந்து இதை அறியலாம். 1பேதுரு 4:7.

***'எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று' என்று பேதுரு சொல்கிறார். 1பேதுரு 4:7-11. அப்படியானால் கிறிஸ்தவர்கள் எவ்வாறு வாழவேண்டும்?***

---

---

தெளிந்தபுத்தியும், ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுமாய் இருக்கவேண்டும்; அதுபோக, 'ஒருவரிலொருவர் ஊக்கமான அன்புள்ளவர்களாக' இருக்க வேண்டும்; 'அன்பு திரளான பாவங்களை மூடும்.' 1பேதுரு 4:8.

அப்படியானால் என்ன அர்த்தம்? அன்பு எவ்வாறு பாவத்தை மூடுகிறது? பேதுரு மேற்கோள்காட்டும் வசனத்தில் அதற்கான பதில் உள்ளது: 'பகை விரோதங்களை எழுப்பும்; அன்போ சகல பாவங்களையும் மூடும்.' நீதி 10:12. நாம் ஒருவரிலொருவர் அன்பாக இருக்கும்போது, நமக்குத் தீமைசெய்கிறவர்களையும் நம்மைப் புண்படுத்துகிறவர்களையும் உடனடியாக மன்னிக்கிறோம். கிறிஸ்துவின் அன்புதான் நம்முடைய பாவங்களை மன்னிக்கச்செய்கிறது; நம்முடைய அன்பு மற்றவர்களுடைய தவற்றை நாம் மன்னிக்கச் செய்யவேண்டும். அன்பு பெருகினால், சிறு குற்றங்காளானாலும் பெரிய குற்றங்களானாலும் அவற்றை நாம் எளிதில் மறந்து, மன்னித்துவிடுவோம்.

நாம் நம் முழு இருதயத்தோடு தேவனில் அன்புகூருவதிலும், நம்மைப்போல நாம் பிறரை நேசிப்பதிலும்தான் நியாயப்பிரமாணம் முழுவதும் அடங்கி இருக்கிறது என்று இயேசுவும் பவுலும் சொன்ன அதே உண்மையைதான் இங்கு பேதுருவும் கூறுகிறார். மத் 22:34-39; ரோமர் 13:8-10.

கிறிஸ்தவர்கள் விருந்தோம்புகிறவர்களாக இருக்கவேண்டுமென்றும் பேதுரு வலியுறுத்துகிறார். இயேசு சீக்கிரம் வரப்போவது உண்மைதான்; அதை காரணமாகக் காட்டி, சமுதாய உறவுகளிலிருந்து கிறிஸ்தவர்கள் பின்வாங்கக்கூடாது. இறுதியாக, கிறிஸ்தவர்கள் பேசும்போது தேவனுடைய வார்த்தைகளே அவர்களுடைய வாயில் இருக்கவேண்டும். அதாவது, காலத்தின் அருமையை உணர்ந்து, ஆவிக்குரிய சத்தியங்களைமாத்திரம் பேசவேண்டும்.

'அன்பு திரளான பாவங்களை மூடும்.' யார் உங்களுக்கு தீங்கு செய்திருக்கிறார்? அந்தப் பாவத்தை 'மூடுவதற்கு' தேவையான அன்பு உங்களில் வெளிப்பட நீங்கள் என்ன செய்யலாம்? அவ்வாறு செய்வது எவ்வாறு உங்களுக்கே நன்மைபயக்கும்?

# மேலும் படிக்க:

வெள்ளி
ஏப்ரல் 28

'சகலத்தையும் தாங்குகிற, பரிதாபம்கொள்கிற அன்பானது ஒரு தவறை, மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகப் பெரிதுபடுத்தாது; பிறர் குற்றங்களில் குளிர்காயாது. தவறுகளை நீடியபொறுமையோடும் அக்கறையோடும் அணுகவேண்டும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது. சரியான போக்கைக் கடைபிடித்தால், கடின இதயமும்கூட கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள வாய்ப்புண்டு. இயேசுவின் அன்பு திரளான பாவங்களை மூடுகிறது. அவசியம் இருந்தாலொழிய, பிறருடைய தவறுகளை வெளிப்படுத்த அவருடைய கிருபை ஒருபோதும் வழிநடத்தாது.' – *EGW, CT, p 267.* உதாரணமாக, விபசாரத்தில் அகப்பட்ட பெண்ணை இயேசு கையாண்ட விதத்தை யோசியுங்கள். யோவான் 8: 1–11. விழுந்துபோன ஒரு பெண்ணிடம் கிறிஸ்து எவ்வளவு கிருபை காட்டினாரெனப் பார்ப்போம். இதில் இன்னோர் ஆழமான கருத்தும் உள்ளது. அந்தப் பெண்ணை தம்மிடம் கொண்டுவந்த மதத்தலைவர்களை அணுகும்போது, 'அவர்களுடைய வாழ்க்கையின் இரகிய பாவங்களை' (*EGW, DA, p 461*) அழிந்துபோகும் மணலில் இயேசு எழுதியது ஏன்? அந்தப் பெண்ணைபோல அல்லது அதைவிட கொடுமையாக அவர்கள் பாவிகள் என்பது தமக்குத் தெரியுமென அவர் ஏன் வெளிப்படையாகக் குற்றஞ்சாட்டவில்லை? அவர்களுடைய மாய்மாலமும் பாவமும் தமக்குத் தெரியுமென்றும், ஆனாலும் அவற்றை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்தப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டினார். அந்த மனிதர்களையும் ஆதாயப்படுத்த விரும்பிய இயேசுவின் பாணி அது; அதாவது, அவர்களுடைய நோக்கங்கள் தமக்குத் தெரியுமென்றும், அவர்களும் இரட்சிக்கப்பட ஒரு வாய்ப்புகொடுக்கப்படுவதையும் காண்பித்தார். பாவம்செய்தவர்களை எவ்வாறு அணுகவேண்டும் என்பதற்கு எத்தகைய ஒரு பாடம் இது!

## கலந்துரையாடக் கேள்விகள்

1. ஒற்றுமை வேறு, ஒரே இயல்பு வேறு; அது எவ்வாறு? ஒரு சபையாக நாம் செயல்படுவதற்கு சிலவிஷயங்களில் நாம் ஒரே எண்ணமுடையவர்களாக இருக்கவேண்டிய அவசியம் உள்ளதா? ஆம் என்றால், அந்த விஷயங்கள் என்ன? எவ்வாறு அத்தகைய ஒரே இயல்பை நாம் பெறலாம்? அதேநேரம், என்னென்ன விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் நன்மை பயக்கும்?

2. பாவத்தை விரட்டுவதில் 'மாம்சத்தில் பாடுபட்ட' உங்களுடைய அனுபவம் என்ன? தேவ வல்லமை நம் வாழ்க்கையில் செயல்பட்டால் நாம் தானாகவே மாறிவிடலாம்; மாம்சத்தில் பாடுபடவேண்டியதில்லை என்று அர்த்தமா? இல்லையென்றால், அதற்கான காரணத்தைச் சொல்லுங்கள்.

3. மதுபானத்தால் வாழ்க்கையில் ஏற்படும் சீரழிவுகளை எல்லாம் சுற்றிலும் பாருங்கள். இதன் ஆபத்தை மக்கள் கண்டுகொள்ள, ஒரு சபையாக நாம் என்ன செய்யலாம்? இவ்வளவு தீங்கான இதை விளையாட்டுக்குக்கூட சீண்டக்கூடாதென நம் வாலிபர்களை நாம் எச்சரிப்பதற்கு நாம் என்ன செய்யலாம்?

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.